செய்திக்குறிப்பு எண்: 15

04.02.2010

# செய்திக் குறிப்பு

பிப்ரவரி 3 ஆம் தேதியிட்ட ஒரு நாளிதழில் வனப்பகுதியில் முறைகேடாக சாலை அமைத்து லாரி லாரியாக விலை உயர்ந்த மரங்களை கடத்தல் என்ற தலைப்பின் கீழ் நாளிதழின் முதல் பக்கத்தில் செய்தி வெளியானது குறித்து கீழ்வருமாறு எனது விளக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த நாளிதழில் வெளியாகியுள்ள செய்தியும், புகைப்படமும் அரசுக்கு சொந்தமான நிலத்தை ஒட்டியுள்ள தனியார் நிலத்தில் உள்ள சீகை மரங்கள் மற்றும் நாவல், பலா உட்பட 15 பல இன மரங்கள் வெட்டப்பட்டது சம்மதப்பட்டதாகும். அரசுக்கு சொந்தமான வனப்பகுதியில் இருந்து மரங்கள் ஏதும் வெட்டப்படவில்லை. மேலும் இந்த மரங்களை வெட்டி கடத்தப்படுவதற்கு வனப்பகுதியில் ஜெ.சி.பி. வாகனத்தை பயன்படுத்தி, பாறைகளை குடைந்து சாலை வசதி ஏற்படுத்தியுள்ளதாக வெளியாகியுள்ள செய்தியிலும் உண்மையில்லை. தனிப்பட்டவரின் பட்டா நிலத்தையும், பிரதானசாலையையும் இணைக்கும் இந்த இணைப்புச்சாலை நீண்டகாலத்திற்கு முன்பே அமைக்கப்பட்ட பழைய சாலையாகும். புதியதாக சாலை எதுவும் அந்த நாளிதழில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைக்கப்படவில்லை. அந்த நாளிதழில் உள்ள புகைப்படமே இதை உறுதிப்படுத்துகிறது. தனியார் நிலங்களில் இருந்து மரங்கள் வெட்டப்பட்டு நீலகிரி பகுதியில் உள்ள தேயிலை தொழிற்சாலைகளில் விறகாக பயன்படுத்துவது சில சமயங்களில் நிகழ்கிறது. அவ்வாறு தனியார் நிலங்களிலிருந்து மரங்கள் அனுமதியின்றி வெட்டப்படும்போது வனத்துறையினரால் வழக்குகள் பதியப்பட்டு மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த குறிப்பிட்ட நிகழ்வில் அனுமதியின்றி தனது நிலத்தில் இருந்து மரங்களை வெட்டியதற்காக நிலத்தின் உரிமையாளர் திரு.முகமது பிலால் என்பவர் மீது திரு. குந்தா, வனச்சரகரால் 02.02.2010ல் வழக்கு பதிவுசெய்யப்பட்டும், வெட்டப்பட்ட மரங்களை கடத்திய லாரி ஓட்டுநர் திரு. சிவராமன் மீதும் வனக்குற்ற வழக்கு பதியப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே அரசுக்கு சொந்தமான வனப்பகுதியிலிருந்து விலை உயர்ந்த மரங்கள் வெட்டப்பட்டு, லாரி லாரியாக கடத்தப்படுகிறது என்பது உண்மையான செய்தி அல்ல என்பதை தங்களுக்கு அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஒப்பம்)
என். செல்வராஜ்
வனத்துறை அமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

பொ. சேகையன்
நேர்முக உதவியாளர்
வனத் துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர்
தலைமைச் செயலகம், சென்னை-600 009